உண்மைக்கூலி 1979ஆம் ஆண்டின் 4 சதவீத அதிரிப்புக்கெதிராக 14 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

தனியார்துறையில் வேளாண்மைத் தொழிலாளர்களின் பணக்கூலி 25சதவீதத்தால் உயர்வடைந்தவிடத்து கைத்தொழில் வர்த்தகத் தொழிலாளரது கூலி 22 சதவீதத்தால் அதிகரித்தது. 1979ஆம் ஆண்டின் ஒப்பீட்டு எண்தொகைகள் முறையே 28 சதவீதமாகவும் 17 சதவீதமாகவும் விளங்கின. தனியார்துறைக்கான தொழிலாளர்களின் இணைந்த பணக்கூலிச்சுட்டெண் முன்னைய ஆண்டின் 27சதவீத அதிகரிப்புக்கெதிராக 25 சதவீதத்தால் அதிகரித்தது.

1979ஆம் ஆண்டில் 15 சதவீதத்தால் உயர்வடைந்த வேளாண்மைத்துறை தொழிலாளர்களின் உண்மைக்கூலிகள் 1980ஆம் ஆண்டின் 0.2 சதவீதங்கொண்ட சிறிதளவில் வீழ்ச்சியடைந்தது. இதே போன்று 1979ஆம் ஆண்டின் கைத்தொழில் வர்த்தகத்துறை தொழிலாளர்களின் உண்மைக்கூலி அதிகரிப்பான 5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1980 ஆம் ஆண்டில் 3 சத வீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

## வர்த்தகம்

1980 ஆம் ஆண்டில் இலங்கையின் வர்த்தக நிலுவை சுங்கத் தரவுகளின் அடிப்படையில் ரூ. 163,640 இலட்சம்கொண்ட(சிஎஉ 7,610 இலட்சம்) குறையினைப் பதிவுசெய்தது. 1979ஆம் ஆண்டின் ரூ.72,870 இலட்சம் கொண்ட(சிஎஉ 3,620 இலட்சம்)குறையுடன் ஒப்பிடுகையில் இது 125 சதவீதம் (சிஎஉ நியதிகளில் 110 சதவீதம்) கொண்டதொரு அதிகரிப்பினைக் காட்டுகின்றது. 1980 ஆம் ஆண்டில் இத்தகைய பாதகமான வர்த்தக நிலைமை ஏற்பட்டமைக்கு இறக்குமதிகளின் பெறுமதிகள் ரூ. 110,770 இலட்சத்தால் அல்லது 49 சதவீதத்தால் (சிஎஉ நியதிகளில் 39 சதவீதம்) அதிகரித்து ரூ. 336,370 இலட்சமாக (சிஎஉ 15,630 இலட்சம்) விளங்கியமையே முதன்மைக்காரணியாகும். இதற்கு மாறாக, ஏற்றுமதி வருவாய்கள், 13 சதவீதத்தால் (சிஎஉ நியதிகளில் 6 சதவீதம்) மட்டும் அதிகரித்து ரூ. 172,730 இலட்சமாக (சிஎஉ 8,030 இலட்சம்) காணப்பட்டது. சில அரச முகவர் நிலையங்களால் மேற்கொள்ளப்பட்ட, இறக்குமதிகள் ஏற்றுமதிகளுக்கான சுங்கத்தரவுகள் ஒருகால இடைவெளிக்குப் பின்னர் சீராக்கம் செய்யப்பட்டபோது வர்த்தகக்குறை ரூ. 155,610 இலட்சமாக அமைந்தது.

### அட்டவணை 1.22
### வர்த்தக நிலுவை 1978– 1980

பெறுமதி பத்து இலட்சம் ரூபாய்களில்
(சி.எ.உ. பத்து இலட்சம் அடைப்புக் குறிக்குள்)

| ஆண்டு | இறக்குமதிகள் | | ஏற்றுமதிகள் | | வர்த்தக நிலுவை | |
|---|---|---|---|---|---|---|
| | சுங்கம் | சீராக்கம் செய்யப்பட்டது | சுங்கம் | சீராக்கம் செய்யப்பட்ட | சுங்கம் | சீராக்கம் செய்யப்பட்ட |
| 1978 ... | 14,687 (774)அ | 15,100 | 13,206 (674) | 13,193 | — 1,480 (–100) | — 1,907 |
| 1979ஆ ... | 22,560 (1,121) | 22,602 | 15,273 (759) | 15,282 | — 7,287 (–362) | — 7,320 |
| 1980 ... | 33,637 (1,563) | 33,360 | 17,273 (803) | 17,799 | —16,364 (–761) | —15,561 |

(அ) 1977 நவெம்பர் 15 இற்குப்பின்னர் அந் நாளின் முன்னர் நிலவிய வீதங்களில் நடைபெற்ற கொடுக்கல் வாங்கல்கட்டாகச் செய்யப்பட்ட சீராக்கங்களை உள்ளடக்கும்.

(ஆ) திருத்தப்பட்டது.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்,
உணவு ஆணையாளர் திணைக்களம்,
இலங்கை வளமாக்கிக் கூட்டுத்தாபனம்,
பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,
அரச இரத்தினக்கற் கூட்டுத்தாபனம்.

இறக்குமதி விலைச்சுட்டெண்ணால் அளவிடப்பட்டதற்கமைய, இறக்குமதி விலைகளில் ஏற்பட்ட *43* சதவீத அதிகரிப்பின் விளைவாக மொத்த இறக்குமதிகளின் பெறுமதிகள் பெருமளவு அதிகரித்து காணப்பட்டதுடன், இவற்றின் விளைவுகள் இறக்குமதி அளவில் ஏற்பட்ட *14* சதவீத விரிவாக்கத்தினால் மேலும் வலுவுற்று அமைந்திருந்தது. ஆயினும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்பு முழுமையாக, ஏற்றுமதி விலைகளில் ஏற்பட்ட *16* சதவீதம் கொண்டதொரு மேல்நோக்கிய அதிகரிப்பால் ஏற்பட்ட வேளையில், ஏற்றுமதி அளவுச் சுட்டெண் அடிப்படையிலான அளவீட்டின் அடிப்படையில், ஏற்றுமதி அளவு *2* சதவீதம் கொண்ட சிறிதளவு வீழ்ச்சியினைக் கொண்டு விளங்கியது.

*1979* ஆம் ஆண்டின் *28* சதவீதப் புள்ளி வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் *1980* ஆம் ஆண்டில் வர்த்தக மாற்று விகிதம் *14* சதவீதப் புள்ளிகளால் வீழ்ச்சியுற்றது. வர்த்தக மாற்று விகிதத்தில் ஏற்பட்ட இவ்வீழ்ச்சியே பாதகமான வர்த்தக நிலுவை பதியப்பட்டமைக்கு முதன்மைக் காரணியாக விளங்கியது. அதே வேளையில் இறக்குமதி விலைகள் *43* சதவீதத்தால் அதிகரிக்க, ஏற்றுமதி விலைகள் *16* சதவீதத்தால் மட்டும் அதிகரித்து வர்த்தக மாற்று விகிதத்தில் *19* சதவீத வீழ்ச்சியொன்றை உருவாக்கியது. இப்பகுதியின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை மிகவும் பாதகமான வகையில் பாதிப்புற்றிருக்கின்றது. கிடைக்கப்பெறும் தரவுகள் சுட்டிக்காட்டுவது யாதெனில், பிலிப்பைன்சு, சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் வர்த்தகமாற்று விகிதம் வீழ்ச்சியுற்றபோதிலும், அதனால் ஏற்பட்ட தாக்கம் இலங்கையினதைவிடப் பாதகம் குறைந்ததாகவே காணப்பட்டது என்பதேயாகும்.

இத்தகைய பாதகமான செயலாக்கங்கள் காணப்பட்ட போதிலும் *1977* ஆம் ஆண்டின் சீர்திருத்தங்களின் விளைவாக இறக்குமதி உள்ளீட்டின் அமைப்பில் ஏற்பட்ட அடிப்படை மாற்றங்கள் 1980இலும் தொடர்ந்து காணப்பட்டது. இது குறிப்பாக அபிவிருத்திசார்ந்த தொகுதிகளில் முதலீட்டுப் பொருட்களினதும் இடைநிலைப் பொருட்களினதும் பங்குகளில் ஏற்பட்ட அதிகரிப்பினாலும், நுகர்வுப் பொருட்களின் இறக்குமதியில் ஏற்பட்ட வீழ்ச்சியின் பயனாக ஏற்பட்டதாகும். நுகர்வுப் பொருட்களின் பங்கு *1979* இல் *35* சதவீதத்திலிருந்து *1980* இல் *29* சதவீதமாக வீழ்ச்சியுற்றது.

### அட்டவணை 1.23
### வெளிநாட்டு வர்த்தகம் 1971—1980

| ஆண்டு | பத்து இலட்சம் ரூபாய்களில்: ஏற்றுமதிகள் (அ) (க.எ.பெ.) | இறக்குமதிகள் (கொ.க.க.) | வர்த்தக நிலுவை | சுட்டெண்கள் (1978=100) அளவு: எல்லா ஏற்றுமதிகளும் | எல்லா இறக்குமதிகளும் | விலைகள்: எல்லா ஏற்றுமதிகளும் | எல்லா இறக்குமதிகளும் | வர்த்தக மாற்று விகிதம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1971 ... | 1,947 | 1,986 | — 39 | 104 | 68 | 17 | 17 | 98 |
| 1972 ... | 2,009 | 2,064 | — 55 | 102 | 67 | 17 | 18 | 94 |
| 1973 ... | 2,617 | 2,715 | — 98 | 103 | 60 | 20 | 24 | 82 |
| 1974 ... | 3,471 | 4,554 | —1,082 | 89 | 42 | 31 | 42 | 72 |
| 1975 ... | 3,933 | 5,251 | —1,318 | 107 | 52 | 29 | 49 | 58 |
| 1976 ... | 4,815 | 4,645 | + 170 | 102 | 57 | 34 | 44 | 78 |
| 1977 ... | 6,638 | 6,007 | + 631 | 94 | 73 | 55 | 54 | 102 |
| 1978 | 13,206 | 14,687 | —1,480 | 100 | 100 | 100 | 100 | 100 |
| 1979 | 15,273 | 22,560 | —7,287 | 101 | 123 | 109 | 152 | 72 |
| 1980 .. | 17,273 | 33.637 | —16,364 | 99 | 140 | 126 | 217 | 58 |

அ. மீள் ஏற்றுமதிகள் உள்பட.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

**ஏற்றுமதிகள்**

*1980 ஆம் ஆண்டின் ஏற்றுமதி வருவாய்கள் ரூ. 172,730 இலட்சமாக (சிஎஉ 8,030 இலட்சம்) அமைந்து முன்னைய ஆண்டினை விட 13 சதவீதம் கொண்ட தொரு அதிகரிப்பைப் பதிவு செய்தது ஆயினும், சிஎஉ நியதிகளில் வளர்ச்சிவீதம் 6 சதவீதமாக மட்டும் இருந்ததுடன் அது முன்னைய ஆண்டு வளர்ச்சி வீதத்தின் 50 சதவீதமாகவே காணப்பட்டது.* ரூபா நியதிகளில் தேயிலை, இறப்பர், சிறு வேளாண்மைப் பயிர்கள் மற்றும் கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் அதிகரித்திருந்த வேளையில் தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள், இரத்தினக் கற்கள் ஆகியவற்றிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியுற்றுக் காணப்பட்டன. முதன்மை ஏற்றுமதிப் பயிர்த் துறையின் வளர்ச்சி வீதம் கைத்தொழில் ஏற்றுமதிகளின் வளர்ச்சி வீதத்திலும் குறைவாகக் காணப்பட்டதுடன், மரபுப் பயிர்த்துறை தொடர்பான பங்கு *1979 இன் 65 சத வீதத்திலிருந்து 1980 இல்* மொத்த ஏற்றுமதிகளில் *58 சத வீதத்திற்கு வீழ்ச்சியுற்றது.* மறுபுறத்தில் பெற்றோலியம், புடவைகள் என்பனவற்றின் ஏற்றுமதிகள் முறையே *1979 ஆம் ஆண்டின் 13 சத வீதத்திலிருந்து 1980 ஆம் ஆண்டில் 17 சத வீதமாகவும், 1979 ஆம் ஆண்டின் 7 சத வீதத்திலிருந்து 11 சத வீதமாகவும் அதிகரித்தன.* மரபு வழி முறையில் இலங்கைக்கு அதிகளவு செலாவணி உழைப்பினை இரண்டாவது நிலையில் பெற்றுத்தரும் இறப்பரினைவிட பெற்றோலிய ஏற்றுமதிகளின் பெறுமதி அதிகரித்துக் காணப்பட்டது. ஆயினும் தேயிலை ஏற்றுமதிகள் தொடர்ந்தும் மொத்த ஏற்றுமதிப் பெறுமதியில் *36 சத வீதத்திற்கு வகைகூறின.*

**அட்டவணை 1.24**

**ஏற்றுமதிகளின் உள்ளமைப்பு 1978 — 1980**

| வகை | பெறுமதி பத்து இலட்சம் ரூபாய்களில் (சி. எ. உ. பத்து இலட்சங்கள் அடைப்புக் குறிக்குள்) | | | மொத்த ஏற்றுமதிகளின் சதவீதம் | | |
|---|---|---|---|---|---|---|
| | 1978 (அ) | 1979 | 1980 | 1978 | 1979 | 1980 |
| 1. தேயிலை ... ... | 6,401 (327) | 5,722 (284) | 6,170 (287) | 48 | 38 | 36 |
| 2. இறப்பர் ... ... | 2,021 (103) | 2,491 (124) | 2,590 (120) | 15 | 16 | 15 |
| 3. தெங்கு ... .. | 1,271 (65) | 1,699 (84) | 1,234 (57) | 10 | 11 | 7 |
| 3.1 உள்ளீட்டுஉற்பத்திகள் ... | 972 (50) | 1,298 (65) | 754 (35) | 7 | 8 | 4 |
| 3.2 ஏனையவை | 299 (15) | 401 (20) | 480 (22) | 2 | 3 | 3 |
| 4. சிறு வேளாண்மைப் பயிர் ஆ | 723 (37) | 825 (41) | 840 (39) | 6 | 6 | 5 |
| 5. கைத்தொழில் ஏற்றுமதி ஆ | 1,944 (99) | 3,737 (186) | 5,496 (255) | 15 | 24 | 32 |
| 5.1 புடவையும் ஆடைகளும் . | 481 (25) | 1,108 (55) | 1,814 (84) | 4 | 7 | 11 |
| 5.2 பெற்றோலியஉற்பத்திகள் | 945 (48) | 1,926 (96) | 2,999 (139) | 7 | 13 | 17 |
| 5.3 ஏனையவை .. | 518 (26) | 703 (35) | 682 (32) | 4 | 4 | 4 |
| 6. இரத்தினக் கற்கள் ... | 531 (27) | 490 (24) | 458 (21) | 4 | 3 | 3 |
| 7. ஏனைய எற்றுமதிகள் .. | 315 (16) | 309 (15) | 485 (23) | 2 | 2 | 3 |
| மொத்த ஏற்றுமதிகள் .. | 13,206 (674) | 15,273 (759) | 17,273 (803) | 100 | 100 | 100 |

மூலம்: இலங்கைச் சுங்கம்.

(அ) திருத்தியமைக்கப்பட்டது.

(ஆ) தெரிந்தெடுக்கப்பட்ட விடயங்கள் (திருத்தியமைக்கப்பட்டது)

1979 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1980 ஆம் ஆண்டில் தேயிலை ஏற்றுமதிகள் ரூ. 61,700 இலட்சமாக (சி எ உ 2,870 இலட்சம்) 8 சத வீதம் கொண்டதொரு அதிகரிப்பினைக் கொண்டு விளங்கியது. தேயிலை ஏற்றுமதியின் அளவு 1979 ஆம் ஆண்டின் 1,880 இலட்சம் கிலோக்களிலிருந்து 1980 ஆம் ஆண்டில் 1,850 இலட்சம் கிலோக்களாகச் சிறிதளவினால் வீழ்ச்சியுற்றது. இது உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்ட போதிலும் ஏற்றுமதிகள் 1979 ஆம் ஆண்டின் மட்டத்திலேயே பேணப்பட்டதை எடுத்துக் காட்டுவதாக உள்ளது. இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட ஒரு கிலோத் தேயிலையின் சராசரி க. ஏ. பெ. விலை 1980 ஆம் ஆண்டில் ரூ. 33.41 (சி எ உ 1.55) ஆக விளங்கி ரூபா நியதிகளில் 10 சத வீதம் கொண்ட (சி எ உ நியதிகளில் 2 சத வீதம்) அதிகரிப்பினைக் கொண்டு விளங்கியது. கொழும்பு ஏலங்களில் விற்பனை செய்யப்பட்ட தேயிலையின் அளவு 1979 இன் 1890 இலட்சம் கிலோக்களிலிருந்து 1980 இல் 1780 இலட்சம் கிலோக்களாக 5 சத வீதத்தால் வீழ்ச்சியுற்றது. ஆயினும் இலண்டன் ஏலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட இலங்கைத் தேயிலையின் அளவு தொடர்ந்தும் 120 இலட்சம் கிலோக்களாக மாற்றமுறாதிருந்தது. இலண்டன் ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்பட்ட இலங்கைத் தேயிலை 1980 ஆம் ஆண்டில் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் 6 சத வீதத்திற்கு வகை கூறியது. கொழும்பு ஏலங்களில் விற்பனையான இலங்கைத் தேயிலையின் சராசரி மொத்த விலை கிலோ ஒன்று 1979 ஆம் ஆண்டில் ரூ. 12.30 இலிருந்து 1980 ஆம் ஆண்டில் ரூ. 18.33 ஆக 49 சத வீதத்தால் அதிகரித்த வேளையில் இலண்டன் ஏலங்களில் விற்பனையான இலங்கைத் தேயிலை வெளிநாட்டுச் செலாவணி நியதிகளில் 1979 ஆம் ஆண்டின் 105 பென்சிலிருந்து 1980 ஆம் ஆண்டில் 92 பென்சாக வீழ்ச்சியுற்றது. 1979 ஆம் ஆண்டு யூலையிலிருந்து நடைமுறைக்கு வந்த, அடைக்கப்படாத தேயிலை மீதான, கிலோ ஒன்றுக்கு ரூ. 5.00 கொண்ட ஏற்றுமதித் தீர்வைக் குறைப்பின் விளைவாகக் கொழும்பு ஏலங்களில் உயர்ந்த விலை பெறப்பட்டன. மொத்தத் தேயிலை ஏற்றுமதியில் 83 சத வீதம் அடைக்கப்படாத வடிவிலேயே ஏற்றுமதி செய்யப்பட்டது. 1979 ஆம் ஆண்டில் உயர்ந்த விலைகள் பெறப்பட்ட போதிலும் அதிகரித்த செலவு காரணமாக முழுத் தேயிலை கைத்தொழிலும் திரவச் சிக்கலால் பாதிப்புற்றது. தேயிலையிலிருந்தான வருமானத்தில் ஏறக்குறைய மூன்றிலொரு பங்கு தீர்வைகளாகவும் வரிகளாகவும் அரசால் ஈர்த்தெடுக்கப்பட்டது.

1980 ஆம் ஆண்டில் இறப்பர் ஏற்றுமதிகளின் பெறுமதி ரூ, 25,900 இலட்சமாக விளங்கி (சி எ உ 1,200 இலட்சம்) ரூபாய் பெறுமதியில் சிறிதளவு அதிகரிப்பைக் கொண்டிருந்த போதிலும் சி எ உ நியதிகளில் முன்னைய ஆண்டிலும் குறைவொன்றையே பெற்றிருந்தது. இந்த ரூபாய் பெறுமதியில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு உயர்ந்த ஏற்றுமதி விலைகளே முழுமையான காரணியாக விளங்கி நின்றது. சராசரி க. எ. பெ. விலை 1979 ஆம் ஆண்டின் ரூ. 19.44 இலிருந்து 1980 ஆம் ஆண்டில் ரூ. 21.42 ஆக அல்லது 10 சத வீத அதிகரிப்பினைக் கொண்டு விளங்கி, இலங்கை ரூபாவின் செலாவணிப் பெறுமதி தேய்வினைப் பெருமளவில் எடுத்துக் காட்டுகின்றது. சி. எ. உ நியதிகளில் க. ஏ. பெ. விலை, அளவிடப்பட்டவிடத்து 3 சத வீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது. ஏற்றுமதி செய்யப்பட்ட இறப்பரின் அளவு 1979 ஆம் ஆண்டின் 1,280 இலட்சம் கிலோக்களிலிருந்து 1980ஆம் ஆண்டில் 1,210 இலட்சம் கிலோக்களாக 70 இலட்சம் கிலோக்களால் வீழ்ச்சியுற்றது. கொழும்புச் சந்தையிலும் விலையதிகரிப்புக்கள் காணப்பட்டன. ஆர் எஸ் எஸ் I, II ஆகியவற்றின் ஆண்டுச் சராசரி விலைகள் முறையே கிலோ ஒன்றுக்கு ரூ. 9.15 இலிருந்து ரூ. 10.62 ஆகவும் ரூ. 8.56 இலிருந்து ரூ. 9.73 ஆகவும் அதிகரித்தன. 1980 ஆம் ஆண்டில் இறப்பர் இருப்புக்கள் தொடர்ந்தும் அதிகரித்தே காணப்

பட்டன. சீனுவில் கொள்வனவு செய்யயப்படும் இலங்கை இயற்கை இறப்பரின் அளவுகள் கடந்த சில ஆண்டுகளில் படிப்படியாக வீழ்ச்சியையே காட்டி நின்றது, அதனுல் கைத்தொழிலின் பெரும் நன்மையில் ஏனைய இலக்குகளை அடையும்வரை தட்டை இறப்பர் ஏற்றுமதியில் தனியார் துறையினரை ஊக்குவிப்பது இன்றியமை யாததாகும்.

1980 ஆம் ஆண்டில் தெங்கு ஏற்றுமதிகளின் பெறுமதி 1979 இன் ரூ, 16,990 இலட்சத்திலிருந்து (சி எ உ 840 இலட்சம்) 27 சதவீதத்தால் ரூ. 12,340 இலட்சமாக (சி. எ. உ. 570 இலட்சம்) அதிகரித்தது. தெங்கு உள்ளீட்டு உற்பத்திகளின் பெறுமதி ரூ, 5,440 இலட்சத்திஞல் அல்லது 42 சத வீதத்தால் வீழ்ச்சியுற்ற வேளை யில், ஏனைய தெங்கு உற்பத்திகள் ரூ. 790 இலட்சத்திஞல் அதிகரித்துள்ளது. தெங்குத்துறையில் 1980 ஆம் ஆண்டில் காணப்பட்ட ஏமாற்றம் தரும் செயலாற்றத்திற்கு வழங்கலில் காணப்பட்ட வரையறுக்கப்பட்ட தன்மைகளே முதன்மைக் காரணியாகும். உலர்த்திய தேங்காய், தேங்காயெண்ணெய் மற்றும் தேங்காய்த் துருவல் போன்ற முதன்மைத் தெங்கு உற்பத்திகளின் ஏற்றுமதிப் பெறுமதிகள் வீழ்ச்சியுற்றன. காய்களுக்குச் சமமான நியதிகளில் ஏற்றுமதிப் பெறுமதிகள் 1979 ஆம் ஆண்டின் 5,370 இலட்சம் காய்களிலிருந்து 1980 ஆம் ஆண் டில் 2,390 இலட்சம் காய்களாக அல்லது 55 சத வீதத்தால் வீழ்ச்சியுற்றது, 1980 ஆம் ஆண்டில் இலண்டன் சந்தையில் தேங்காய்த் துருவலின் சராசரி விலை தெங்கு உற்பத்திகளில் இலங்கையின் முதன்மை ஏற்றுமதிப் பொருள் - முன்னைய ஆண்டின் விலைகளுக்குக் கீழாக சிறிதளவால் வீழ்ச்சியுற்றது. எனினும் க. ஏ. பெ. விலைகளும் கொழும்புச் சந்தை விலைகளும் 1980 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்கள வில் அதிகரித்தன, இதற்கு இக்காலப் பகுதியில் இலங்கை ரூபாவின் செலா வணிப் பெறுமதியிலேற்பட்ட தேய்வே ஓரளவு காரணமாகும்.

சிறு வேளாண்மைப் பயிர்களின் ஏற்றுமதி வருவாய்கள் ரூபா நியதிகளில், 1979 ஆம் ஆண்டின் ரூ. 8,250 இலட்சத்திலிருந்து 1980 ஆம் ஆண்டில் ரூ. 8,400 இலட்சமாகசிறிதளவால் அதிகரித்ததெனினும் சிஎஉ நியதிகளில் 5 சதவீத வீழ்ச் சியைப் பதிவு செய்து இவ்வுற்பத்திகளின் விலைகள் உலகப் பண்டச் சந்தையில் அதிகரித்தபோதிலும் வழங்கலில் நிலவிய தடைகளிஞல் அதன் நன்மைகளை அடைய முடியவில்லை. கோப்பி, மிளகு, சாதிக்காய், ஏலம், எள்ளு, வெற்றிலை, புகை யிலை, பப்பாளி மற்றும் இன்றியமையாத எண்ணெய், என்பவற்றின் ஏற்றுமதி அளவுகள் கணிசமானளவில் வீழ்ச்சியடைந்த வேளையில் பாக்கு, கறுவா, கராம்பு, மரமுந்திரி, கடுகு, கொக்கோ, ஏனைய விதைகள் ஆகியவற்றின் ஏற்றுமதி அளவு கள் சிறிதளவால் அதிரித்தன. ரூபா நியதிகளிலும், சிஎஉ நியதிகளிலும் ஏற்றுமதி வருவாய்களின் அதிகரிப்பைக் காட்டிய ஒரேயொரு துறை கைத்தொழில் ஏற்றுமதி களாகும். இது ரூ. 37,370 இலட்சத்திலிருந்து (சிஎஉ 1,860 இலட்சம்) ரூ. 54,960 இலட்சமாக (சிஎஉ 2,550 இலட்சம்) அல்லது 47 சதவீதத்தால் அதிகரித்தது. தூய்மையாக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளின் ஏற்றுமதி ரூ. 29,990 இலட் சத்துக்கு வகைகூறியதுடன் (சிஎஉ 1,390 இலட்சம்) மொத்தக் கைத்தொழில் ஏற் றுமதியில் அதிகளவான பங்குக்கு வகை கூறிய வேளையில் புடவை, தயாரித்த ஆடை ஆகிய ஏற்றுமதிகள் ரூ. 18,140 இலட்சமாக (சிஎஉ 840 இலட்சம்) விளங்கி கைத்தொழில் ஏற்றுமதிகளின் 33 சதவீதத்துக்கு வகை கூறின. பெற்றோலிய ஏற்று மதிகளிலிருந்தான அதிகரித்த வருவாய்களுக்கு ஏற்றுமதிகளின் விலைகளிலேற்பட்ட அதிகரிப்புகளே காரணமாகும். புடவை, தயாரிக்கப்பட்ட ஆடை ஆகியவற்றின் அதிகரித்த ஏற்றுமதி வருவாய்களுக்கு விலை, அளவு ஆகிய இரண்டிலுமேற்பட்ட அதி கரிப்பே காரணமாகும். ஆடை ஏற்றுமதிகளின் அளவு 1979 ஆம் ஆண்டின் 340

இலட்சம் கூறுகளிலிருந்து 1980 ஆம் ஆண்டில் 520 இலட்சம் கூறுகளாக அதிகரித்தது. கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவின் கைத்தொழில் தயாரிப்பு வலயத்திலிருந்தான புடவை ஏற்றுமதிகள் ரூ. 4,700 இலட்சமாக மதிப்பிடப்பட்டன. சுங்கத்தரவுப்படி 1980ஆம் ஆண்டில் இரத்தினக்கல் ஏற்றுமதி வருவாய்கள் வீழ்ச்சியடைந்த போதிலும் அரச இரத்தினக்கற் கூட்டுத்தாபனத்தினல் வழங்கப்பட்ட தரவுகள் குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் காட்டுகின்றன.

1980 ஆம் ஆண்டில் ஏற்றுமதித் துறையின் மொத்தச் செயலாற்றம் ஊக்கமளிப்பதாகக் காணப்படவில்லை. உண்மையில், ஓரளவுக்கு எதிர்பார்த்தவாறு அமையவில்லை. கைத்தொழிலேற்றுமதிகள் தவிர்ந்த எல்லா ஏற்றுமதித் துறைகளினதும் ஏற்றுமதி அளவுகள் வீழ்ச்சியடைந்தன. உலகப் பணவீக்கத்தின் விளைவாக பன்னாட்டு விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு சிறு முன்னேற்றத்தைக்காட்டும் ஏற்றுமதி வருவாய்களை விளைவித்தன. எனினும், 1977 ஆம் ஆண்டிலிருந்து இப்போது இலங்கை அனுபவிக்கும் வர்த்தகமாற்று விகிதத்தின் வீழ்ச்சிபற்றிய கோட்பாட்டைப் பொறுத்தவரையில், ஏற்றுமதிகளின் வளர்ச்சி மட்டத்தை அதிகரிப்பதற்கு மிகவும் ஒருங்கிணைந்த முயற்சியொன்று மேற்கொள்ளப்படல் வேண்டும். தேயிலைக்கான தேக்கமடைந்த கேள்வி இறப்பர், தெங்கு ஏற்றுமதிகளின் வளர்ச்சியைத் தடைசெய்யும் வழங்கல் ஆகியவற்றை நோக்கும்போது மரபல்லா ஏற்றுமதிகளின் அபிவிருத்திக்குக் குறிப்பிடத்தக்களவு கூடிய கவனஞ்செலுத்தப்பட வேண்டிய வேளையில் மரபு வழித்துறையிலும் கவனம் செலுத்துதல் வேண்டும். இறப்பரையும் முன்னைய சிறு வேளாண்மை உற்பத்திகளையும் மூலப்பொருளாகப் பயன்படுத்தும் வேளாண்மையடிப்படையிலான தயாரிப்புத் துறை விருத்தி செய்யப்படவேண்டிய அத்தகைய துறைகளுள் ஒன்ருக இருக்கலாம்.

**இறக்குமதிகள்**

1980 ஆம் ஆண்டில் இறக்குமதிகள் மீதான செலவு 1979ம் ஆண்டின் ரூ. 225,600 இலட்சத்துடன் (சிஎஉ 11,210 இலட்சம்) ஒப்பிடுமிடத்து ரூ. 336,370 இலட்சமாக (சிஎஉ 15,630இலட்சம்) விளங்கி 49 சதவீதங்கொண்ட (சிஎஉ நியதிகளில் 39 சதவீதம்) அதிகரிப்பைக் காட்டியது. இறக்குமதிகளின் பெறுமதியிலேற்பட்ட இப்பெருமளவு அதிகரிப்புக்கு இறக்குமதி விலைச் சுட்டெண்ணிலேற்பட்ட 43 சதவீதமான அதிகரிப்பே காரணமாகும். இறக்குமதிகளின் அளவும் 14 சதவீதத்தால்அதிகரித்தது. எனினும் இறக்குமதிகளின் உள்ளடக்கத்தில் முன்பே காணப்பட்டமாற்றம் 1980 ஆம் ஆண்டிலும் தொடர்ந்திருந்தது. மொத்த இறக்குமதியில் நுகர்வுப் பொருட்களின் பங்கு 1979 ஆம் ஆண்டின் 35 சதவீதத்திலிருந்து 1980 ஆம் ஆண்டில் 29 சதவீதமாக வீழ்ச்சியடைந்த வேளையில் இடைநிலைப் பொருட்களின் தொகுதி, அதனுடன் தொடர்பான பங்கில் 41 சதவீதத்திலிருந்து 46 சதவீதமாக அதிகரித்தது. முதலீட்டுப் பொருட்களின் பங்கு 24 சதவீதமாக மாற்றமின்றியிருந்தது. கொ. கா. க. விலைகளில் பெருமளவு அதிகரிப்புக்கள் காணப்பட்டபோதிலும் உண்மையான மூலதன அமைப்பை உருவாக்குவதன்மூலம், முதலீட்டு அடிப்படையிலான நடவடிக்கைகளுக்கு அதிகமான மூலவளங்களை மாற்றுவதான அரசின் நோக்கம் வெற்றியடைந்துள்ளதாகத் தோன்றுகின்றது. எனினும், மசகெண்ணெயின் விலையில் ஏற்பட்ட பெருமளவான அதிகரிப்பு மூலவளங்களை அவற்றின் ஏனைய பயன்பாடுகளிலிருந்து தடுத்தமையால் மிகப்பெரும் பின்னடைவாகக் காணப்பட்டது.

இவ்வாண்டில் இறக்குமதி செய்யப்பட்ட முதலீட்டுப் பொருட்களின் பெறுமதி ரூ. 81,410 இலட்சமாக (சிஎஉ 3780 இலட்சம்) விளங்கி 49 சதவீத அதிகரிப்

பைக் (சிஎஉ நியதிகளில் 39 சதவீதம்) கொண்டிருந்தது. பொறி, கருவி ஆகியவற்றின் இறக்குமதிகளில்முதலீட்டுப் பொருட்களின் மொத்த இறக்குமதிகளில் அரைப் பங்குக்கு மேலாக வகைகூறிய வேளையில் போக்குவரத்துக் கருவியும் கட்டிடப் பொருட்களும் மிகுதியான பங்குக்கு வகைகூறின. பொறி கருவி ஆகியவற்றின் இறக்குமதிகள் முன்னைய ஆண்டினதை விட 45 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில் கட்டிடப் பொருட்கள் போக்குவரத்துக் கருவி ஆகியன முறையே 66 வீதத்தாலும், 50 சதவீதத்தாலும் அதிகரித்தன. எனினும், இத்துறையில் பதிவு செய்யப்பட்ட அதிகரிப்பின் பெரும் பங்குக்கு இறக்குமதி விலையிலேற்பட்ட அதிகரிப்பினால் வலுபடுத்தப்பட்ட தாக்கத்தின் விளைவாக இறக்குமதி அளவிலேற்பட்ட விரிவே காரணமாகும். இறக்குமதிப்பெறுமதிச்சுட்டெண் முதலீட்டுப் பொருட்களின் தொகுதியில் 19 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்த வேளையில் விலைச்சுட்டெண் 10 சதவீதத்தால் அதிகரித்தது. கட்டிட பொருட்களின் விலைச்சுட்டெண் மிகக் கூடிய மட்ட அதிகரிப்பை, அதாவது 63 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்த வேளையில் பொறியும் கருவியும், போக்குவரத்துக் கருவி ஆகியன முறையே 14 சத வீதத்தாலும் 10 சதவீதத்தாலும் அதிகரித்தன. எனினும் விலைச்சுட்டெண்ணில் பதிவு செய்யப்பட்ட அதிகரிப்புக்கள் ரூபா நியதிகளில் காணப்படுவதால் இலங்கை ரூபாவின் செலாவணிப் பெறுமதியிலேற்பட்ட தேய்வுக்காக பொருத்தமான ஒதுக்கீடு ஒன்று மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1980 ஆம் ஆண்டின் இறக்குமதிகளின் மிகப்பெரும் பங்குக்கு வகைகூறிய இடைநிலைப் பொருட்கள் ரூ. 154,950 இலட்சமாக (சிஎஉ 7,200 இலட்சம்) விளங்கி முன்னைய ஆண்டைவிட 69 சதவீத அதிகரிப்பைக் காட்டுகின்றன. இவ்வதிகரிப்புக்கு அளவு, விலைகள் ஆகிய இரண்டிலுமேற்பட்ட அதிகரிப்புகளே காரணமாகும். இடைநிலைப் பொருட்களின் விலையதிகரிப்புக்கள் 51 சதவீத அதிகரிப்பைக் காட்டிய வேளையில் அளவுச் சுட்டெண் 53 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. விலையைப் பொறுத்தவரையில் 80 சதவீதத்தாலும், அளவைப் பொறுத்தவரையில் 29 சதவீதத்தாலும் அதிகரித்த மசகெண்ணெய் இடைநிலைப் பொருட்கள் மீதான மொத்தச் செலவில் 47 சதவீதத்துக்கு வகை கூறியது. மசகெண்ணெய் மீதான மொத்தச் செலவு முன்னைய ஆண்டைவிட 133 சதவீதத்துக்குமதிகமாக அதிகரித்தது. வளமாக்கி மீதான செலவு அவற்றின் விலையிலும் இறக்குமதிகளின் அளவுகளிலும் ஏற்பட்ட அதிகரிப்புக்களினால் அதிகரித்தன.

நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிச் செலவு 26 சதவீதத்தால் 1979 ஆம் ஆண்டின் ரூ, 78,240 இலட்சத்திலிருந்து (சிஎஉ 3,890 இலட்சம்) மீளாய்வுக்குரிய ஆண்டில் ரூ. 98,840 இலட்சமாக (சிஎஉ 4,590 இலட்சம்) அதிகரித்தது. எனினும் இவ்வகுப்பின் தொடர்பான பங்கு 1979 ஆம் ஆண்டின் 35 சதவீதத்திலிருந்து 1980 ஆம் ஆண்டில் 29 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. உணவு, குடிவகைகள் ஆகியவற்றின் செலவிலேற்பட்ட அதிகரிப்பிற்கு விலையதிகரிப்புக்களே முழுமைப் பொறுப்பாகும். இறக்குமதி அளவுச் சுட்டெண் மிகப்பெருமளவான குறையொன்றைப் பதிவுசெய்தது. எனினும், இறக்குமதி விலைச்சுட்டெண் நியதிகளில் விலைகள் 55 சதவீதத்தால் அதிகரித்தன. இறக்குமதிகளின் அளவிலேற்பட்ட வீழ்ச்சிக்கு அரிசி, மா, சீனி ஆகிய இறக்குமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணமாகும். இவ்வாண்டில் சீனி விலையிலேற்பட்ட பெருமளவான அதிகரிப்புக்கள், விலைச்சுட்டெண்ணில் மேல் நோக்கிய அசைவொன்றினை ஏற்படுத்தியது.

புடவைகளின் இறக்குமதிகள் 12 சதவீதத்தால் அதிகரித்த வேளையில், நுகர்வு உள்ளடக்கிய நுகர்வுப் பொருட்கள் பெறுமதியில் 37 சதவீதத்தால் அதிகரித்தன. இன்றியமையாதனவல்லாதனவாகப் பாகுபாடு செய்யப்படக்கூடிய சில விடயங்களை உள்ளடக்கிய இவ்வகுப்பின் இறக்குமதிகள், மொத்த இறக்குமதிகளில் 6 சதவீதத்துக்கு வகைகூறின. மருத்துவ, மருந்தாக்கல் உற்பத்திகளும், டயர், டியூப் ஆகியவையும் தவிர்க்கப்பட்டால் இப்பங்கு மொத்த இறக்குமதிகளில் 5 சதவீதத்துக்கும் குறைவாயிருக்கும்.

அட்டவணை 1.25

**இறக்குமதிகள் மீதான செலவினம் 1978 — 1980**

| வகை | பெறுமதி | | | | | | மொத்த இறக்குமதிகளின் சதவீதம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | சி.எ.உ. பத்து இலட்சங்களில் | | | | | |
| | 1978 | 1979 | 1980 | 1978 | 1979 | 1980 | 1978 | 1979 | 1980 |
| 1. நுகர்வுப் பொருட்கள் ... | 5,618 | 7,824 | 9,884 | 287 | 389 | 459 | 38 | 35 | 29 |
| 1.1 உணவும் குடிவகைகளும் ... | 4,127 | 4,807 | 6,134 | 211 | 239 | 285 | 28 | 21 | 18 |
| 1.1.1 அரிசி ... | 689 | 884 | 756 | 35 | 44 | 35 | 5 | 4 | 2 |
| 1.1.2 மா ... | 2,192 | 1,691 | 1,788 | 112 | 84 | 83 | 15 | 8 | 5 |
| 1.1.3 சீனி ... | 620 | 929 | 1,915 | 32 | 46 | 89 | 4 | 4 | 6 |
| 1.2 புடவையும் துணிவகையும் ... | 531 | 1,536 | 1,721 | 27 | 76 | 80 | 4 | 7 | 5 |
| 1.3 ஏனையவை ... | 959 | 1,481 | 2,029 | 49 | 74 | 94 | 7 | 7 | 6 |
| 2. இடைநிலைப் பொருள்கள் ... | 5,591 | 9,143 | 15,495 | 286 | 454 | 720 | 38 | 41 | 46 |
| 2.1 பெற்றோலியம் ... | 2,403 | 3,912 | 8,090 | 123 | 194 | 376 | 16 | 17 | 24 |
| 2.2 வளமாக்கி ... | 252 | 673 | 1,333 | 13 | 33 | 62 | 2 | 3 | 4 |
| 2.3 இரசாயனம் ... | 446 | 502 | 544 | 23 | 25 | 25 | 3 | 2 | 2 |
| 3. முதலீட்டுப் பொருட்கள் ... | 3,367 | 5,459 | 8,141 | 172 | 271 | 378 | 23 | 24 | 24 |
| 3.1 பொறிகளும் கருவிகளும் ... | 1,846 | 2,900 | 4,212 | 94 | 144 | 196 | 13 | 13 | 13 |
| 3.2 போக்குவரத்துக் கருவிகள் ... | 988 | 1,615 | 2,421 | 50 | 80 | 113 | 7 | 7 | 7 |
| 3,3 கட்டிடப் பொருட்கள் ... | 150 | 368 | 610 | 8 | 18 | 28 | 1 | 2 | 2 |
| 4. பகுக்கப்படாதவை ... | 110 | 134 | 118 | 30 | 7 | 6 | 1 | 1 | 1 |
| மொத்தம் ... | 14,687 | 22,560 | 33,637 | 774 | 1,121 | 1,563 | 100 | 100 | 100 |

மூலம்: இலங்கைச் சுங்கம்

இறக்குமதி, செய்யப்பட்ட பொருட்கள் அகற்றப்படும் வேளையில் அவற்றின் கொடுப்பனவு சுங்கத்தினால் முறைப்படி வகைப்படுத்தப்படாமையால் உதவி இறக்குமதிகள் பற்றிய வேறான பதிவுகள் கிடைக்கக்கூடியதாயில்லை. எனினும், மொத்த இறக்குமதிகளில் உதவி இறக்குமதிகள் முதன்மையான இடத்தைக் கொண்டுள்ளமையால் வெளிநாட்டு உதவிகள் மீது கிடைக்கத்தக்கதாயுள்ள தரவுகளின் அடிப்படையில் உதவி இறக்குமதிகளை ஏறக்குறைய மதிப்பிடலாம்.[1] 1980 ஆம் ஆண்டுக்கான உதவி இறக்குமதிகள் ரூ. 46,810 இலட்சமாக (சிஎஉ 2,170 இலட்சம்) மதிப்பிடப்பட்டுள்ளது. ஒப்பிடுகையில் 1979ஆம் ஆண்டில் இது ரூ. 42,690 இலட்சமாக (சிஎஉ 2,120 இலட்சம்) காணப்பட்டு உதவி இறக்குமதிகளின் பங்கானது மொத்த இறக்குமதிகளின் சதவீதமாக 1979ஆம் ஆண்டின் 19 சதவீதத்திலிருந்து மீளாய்வுக்குரிய ஆண்டில் 14 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது.

முழுமையாக நோக்குமிடத்து, இறக்குமதிகளின் துறையிலேற்பட்ட அபிவிருத்திகள் முதலீட்டு அடிப்படையிலான இறக்குமதிகளுக்கு மூலவளங்களைத் திருப்புவதில் அரசின் கொள்கைகள், இறக்குமதி விலைகளில் பெருமளவில் அதிகரிப்புக்கள் ஏற்பட்டதனால் வெளிநாட்டுச் செலாவணியில் கணிசமான மாற்றம் ஏற்பட்ட நிலையிலும் வெற்றியளித்துள்ளன. இறக்குமதிகளின் அளவிலேற்பட்ட அதிகரிப்புக்கள் அபிவிருத்தியடிப்படையிலான வகுப்புக்களில் காணப்பட்டபோதிலும் இவைகள் பெரிதும் உணவு, குடிவகைகளைத் தவிர்த்தே இறக்குமதி செய்யப்பட்டன. அபிவிருத்திகளின் ஆண்டு அளவீட்டைக் காட்டிலும் நீண்டதொருகருத்தின்படி ஏனைய பொருட்களின் இறக்குமதிகளைக்காட்டிலும் மூலதனப் பொருட்களின் இறக்குமதி வரவேற்கக்கூடியதொன்றெனினும், இதுபற்றி சற்றுக் கவனத்தில் கொள்ளுதலும் வேண்டும். வரையறுக்கப்பட்ட நிலையில் கிடைக்கும் வளங்கள் அபிவிருத்தியின் போட்டித் தேவைகட்கும் நுகர்விற்குமிடையில் பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும். இதன் உண்மையான சமன்பாடு மூலதனம் இடப்படும் நேரத்தையொட்டியும், இறுதி வெளியீட்டின் விளைவிலும் தங்கியுள்ளது.

**வெளிநாட்டு வர்த்தகக் கொள்கை**

முன்னைய இரு ஆண்டுகளைப் போன்று வெளிநாட்டு வர்த்தகக் கொள்கையின் முதன்மைப்பண்புகளாக வளர்ச்சியில் விரைவானதொருமட்டத்தினை ஏற்படுத்துவதற்கு உதவும் முகமாக வர்த்தக தாராளமாக்கல், ஏற்றுமதித்துறைக்கு உதவி வழங்கல் ஆகியனவற்றையொட்டிய கொள்கைகள் தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்பட்டன.

1980ஆம் ஆண்டில் ஏற்றுமதி ஊக்குவிப்பை விரிவுபடுத்துவதற்கு ஏற்றுமதி தொடர்பான நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதற்கான கொள்கைகளை உருவாக்குவதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் உதவுவதற்காக 1979ஆம் ஆண்டில் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை நிறுவப்பட்டது. இதன் தொழிற்பாடுகள் ஏற்றுமதி அபிவிருத்திக்கான திட்டங்கள் மீது அரசுக்கு மதிப்புரை வழங்கல், தேசிய ஏற்றுமதி நிகழ்ச்சித் திட்டங்களை அமைத்தலுடன் அவற்றின் செயற் பாடுகளை அளவிடல். ஏற்றுமதி உற்பத்திகள் மீதான ஆராய்ச்சி, அபிவிருத்தியை வெளிக்கொணருதல். ஏற்றுமதியாளர்களால் ஏற்றுமதிச் சந்தைகள், பணிகளின் ஏற்பாடுகள் தேவைப்படும்பொழுது ஏற்றுமதி சிக்கல்களை தீர்ப்பதற்கு ஒருமையமாக விளங்கல் ஆகியவற்றையும் உள்ளடக்கும். உற்பத்தித்துறை, அதேபோன்று தொழிற்படும் பரப்புக்கள் (எடுத்துக்காட்டாக ஏற்றுமதி நிதி) இரண்டிலும் ஏற்

---

I. செயற்றிட்ட உதவியின் 75 சதவீதத்தையும், பண்ட உதவி, உணவு உதவி, பநாநி பொறுப்பாண்மைநிதியக் கடன் ஆகியவற்றின் முழு அளவையும் கொண்டே உதவி இறக்குமதி கணிக்கப்பட்டது.

றுமதிகளின் வளர்ச்சியைத்தாக்கும் அடிப்படைக்கட்டுப்பாடுகளை முறையாகஇனங் கண்டுகொள்வதில் சபை முயற்சி எடுத்திருக்கின்றது. இவ்வாய்வுகளின் அடிப்ப டையில் நகைகள், வெள்ளைக்கயிற்றுத் தும்பு, உற்பத்திகள், தேயிலைப்பைகள், தேயிலைப்பொதிகள் இறப்பர் உற்பத்திகளுக்கு மேலதிக ஊக்குவிப்புக்கள் வழங் பப்பட்டன. இதன் காரணமாக நியாயமான செலவில் ஏற்றுமதிப் பொருட்களை உற்பத்தி செய்வதற்குக் கொடுகடன் வழங்கவும் ஏற்றுமதிக்கான நகைத் தயா ரிப்புக்களுக்கு பயன்படும் மூலப்பொருட்களின் இறக்குமதிக்கு உரிமை வழங்கல் ஆகியவற்றிற்கான செயற்றிட்டங்களைச் சபை தொடங்கியது. ஏற்றுமதி விரிவாக்க கொடை வழங்கீட்டுத்திட்டமும் 'குடியரசுத்தலைவரின் ஏற்றுமதி பரிசுத்திட்டமும், ஏற்றுமதியாளர்களை ஊக்குவிக்க நடைமுறைப்படுத்தப்பட்டன. ஏற்றுமதித்தீர்வை தள்ளுபடித்திட்டம் ஒழுங்கான முழு மீளளிப்புக்களை இலகுபடுத்தியது. நிதி உதவி கள் முன்னேடிச் செயற்றிட்டங்களுக்கும் பன்னாட்டு வர்த்தகச் சந்தைகளில் பங்கு கொள்வதற்கும் வழங்கப்பட்டன. ஏலம், மிளகு, போன்ற சிறு ஏற்றுமதிப் பயிர் களைப் பயிர் செய்வதற்கும் தற்பொழுது சந்தைத்திணைகளத்தால் முகாமைப்படுத்தப் படும் தகரத்திலடைக்கும் தொழிற்சாலையின் தொழிற்பாட்டைப் பொறுப்பேற் பதற்கும் உற்பத்தியாளர் ஏற்றுமதியாளர் இருவரும் பங்கேற்கும் விதத்தில் வரை யறுக்கப்பட்ட பொறுப்புக் கூட்டுநிலையங்களை நிறுவுவதற்கு நடைமுறைப்படுத்தக் கூடிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் நீர்க்கல உற்பத்திகளுக் கான அனைத்தையும் உள்ளடக்கிய ஆராய்ச்சி ஆய்வு நிறுவனத்திற்கு நிதியிட ஏற்று மதி அபிவிருத்திச்சபை பொறுப்பேற்றுக்கொண்டது. பொதுநல நாடுகளின்செய லகத்தின் உதவியுடன் சபை கைத்தறிக் கைத்தொழிலுக்கான சந்தை அபிவிருத்திச் செயற்றிட்டத்தைத் தொடங்கியதுடன் குறிப்பிட்ட உற்பத்திகளின் வழங்கல் நிலை மைகளின் மீதான அளவீட்டையும் மேற்கொண்டது.

ஏற்றுமதி அபிவிருத்திச்சபையின் நடவடிக்கைகளுக்கு நிதியிடும் நோக்கத் திற்காக ஏற்றுமதி அபிவிருத்தி நிதியொன்று இவ்வாண்டில் நிறுவப்பட்டது. ஏற்றுமதி அபிவிருத்தித் தீர்வை தெரிந்தெடுக்கப்பட்ட இறக்குமதிகள் மீது விதிக் கப்பட்டதுடன் ஏற்றுமதிகள் நிதிகளின் முதன்மை மூலத்தையும் உள்ளடக்கி யிருந்தது. இறக்குமதிகள் 50 சதவீதம் அல்லது அதற்கு கூடுதலான தீர்வைகளுக்கு உட்பட்டிருந்ததுடன் மேலதிகத் தீர்வையில் 10 சதவீதம் மேலதிகமாகவும் கொடு படவேண்டியிருந்தவேளையில் தெரிந்தெடுக்கப்பட்ட சிறு ஏற்றுமதிப்பயிர்களின் க. ஏ. பெ. பெறுமதியில் 2 சதவீத தீர்வையும் விதிக்கப்பட்டது.

இலங்கை ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் (இ. ஏ. கொ. கா. கூ) ஏற்றுமதிக் கொடுகடன்களுக்கு உத்தரவாதமும்,உறுதிப்பாடும்அளித் ததன் வாயிலாக 1980 ஆம் ஆண்டில் ஏற்றுமதி ஊக்குவிப்புக்குப் பின் முன்னேற்றத் தில் சுறு சுறுப்பாகவும் வெற்றிகரமாகவும் பங்கெடுத்துக் கொண்டது, 1980ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட உத்தரவாதங்களின் பெறுமதி இலக்கை விஞ்சியதுடன் முன்னைய ஆண்டைக் காட்டிலும் 117 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. இ. ஏ. அ. சபை. இ. ஏ. கொ. கா. கூட்டுத்தாபனம் ஆகியவற்றினல் வழங் கப்பட்ட ஊக்குவிப்புக்களுடன் இறைக்கொள்கையின் பொதுவான அமைப்புக் குள் பல ஊக்குவிப்புக்கள் ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்பட்டன. உள்நாட்டு இறைவரிச் சட்டமும் ஏற்றுமதியாளருக்கும் ஏற்றுமதிக்கான உற்பத்தியாளர் களுக்கும் வரிவிடுப்புக்களையும், முதலீட்டுச் சலுகைகளையும் வழங்கியது. தயா ரிக்கப்பட்ட விடயங்களின் ஏற்றுமதிகள் தொடர்ந்தும் வியாபார மொத்த விற் பனை வரியிலிருந்தும் விடுவிக்கப்படும்,

1980 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் 17 விடயங்களின் ஏற்றுமதிகள் உரிமத்திற்குட்பட்டு இருந்ததுடன் ஆண்டுக்காலத்தில் விரயமான தாள், தாள் அட்டைகளும் உரிமத்திற்குட்பட்ட பொருட்களின் பட்டியலின் கீழ் கொண்டு வரப்பட்டன. பைகளில் அடைக்கப்பட்ட தேயிலை, பொதிகளிலடைக்கப்பட்ட தேயிலையின் ஏற்றுமதியை ஊக்குவிக்கும் நோக்கில் பைகளில் அடைக்கப்பட்ட தேயிலை ஏற்றுமதியின் மீதான தீர்வைகள் கிலோ ஒன்றிற்கு ரூ, 10.50 இலிருந்து ரூ, 1-60 இற்கும் பொதிகளிலடைக்கப்பட்ட தேயிலையின் தீர்வை கிலோவிற்கு ரூ, 10.50 இலிருந்து ரூ. 8.50 இற்கும் குறைக்கப்பட்டது. உள்ளூர் உற்பத்தியாளர்களுக்குக் கிடைக்கத்தக்க இலாப எல்லையை அதிகரிக்கும் நோக்கில் தெங்கு உள்ளீட்டு உற்பத்திகளின் மீதான தீர்வைகளும் குறைக்கப்பட்டன. 1980 ஆம் ஆண்டு நவெம்பரில் இறப்பர் ஏற்றுமதிகள் மீதான தீர்வைகள் 15 சத வீதத்தால் எல்லாவகைகளுக்கும் எல்லா விலை மட்டங்களிலும் குறைக்கப்பட்டன,

மீளாய்விற்குரிய ஆண்டில் இறக்குமதித் தீர்வைகள் பல தடவைகள் திருத்தப்பட்டன. இப்பொருட்கள் குறைந்த வழங்கலில் இருந்தமையால் இவற்றின் கிடைக்கும் தன்மையை அதிகரிக்கும் நோக்கில் ஒட்டுப்பலகைக் கதவுகள், கழிவு நீர்த் தொட்டி, கழுவும் தொட்டிகள், கல்நார்த்தகடுகள், நீர் வடிப்பிகள், தீ பிடிக்காத ஆடைகள், கூரைத்தகட்டு விரிப்புக்கள், கட்டிடங்களுக்குப் பயன்படும் நலத்துறைப் பொருட்கள் ஆகியவற்றின் மீதான தீர்வைகள் குறைக்கப்பட்டன. அரசிற்குக் கிடைக்கும் வருவாயை அதிகரிக்கும் நோக்கில் குடிவகை, பீடிசுற்றும் இலைகள், தயாரிக்கப்படாத புகையிலை ஆகியவற்றின் மீதான தீர்வைகளும் அதிகரிக்கப்பட்டன. தன்னியக்க முச்சில்லு வண்டிகள், கைமணிக்கூடுகள், தொலைக்காட்சிப்பெட்டிகள், குறிப்பிட்ட பயணத்தர் ஊர்திகள், வான்கள், பாரவண்டிகள் தவிர்ந்த மின்னியல் கருவிகள், உதிரிப்பாகங்கள், உந்துருளிகள் ஆகியவற்றின் தீர்வைகளும் அதிகரிக்கப்பட்டன. மீன்பிடிக்கைத்தொழிலுக்குப்பயன்படும் பொருட்களுக்கான செலவைக் குறைக்கும் நோக்குடன் மீன்பிடிக் கைத்தொழிலுக்கான செயற்கை நார்வலைகள் மீதான இறக்குமதித்தீர்வை குறைக்கப்பட்டது.

குடியரசுத்தலைவரின் தீர்வை ஆணைக்குழு இறக்குமதித்தீர்வையை தொடர்ச்சியாக மீளாய்வு செய்வதற்கும் பொருத்தமான தீர்வை அமைப்புக்கள் போன்றனவற்றைத் தகவுரை செய்வதற்குமாக 1980 ஆம் ஆண்டு ஒற்றோபரில் நியமிக்கப்பட்டது.

பன்னுட்டு வர்த்தகத்தைப் பொறுத்தவரையில் இலங்கை பன்னுட்டு இறப்பர் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டதுடன் பன்னுட்டுத் தேயிலை உடன்படிக்கைக்கான கலந்துரையாடலிலும் பங்கேற்றது. வர்த்தகம் அபிவிருத்திக்கான ஐக்கியநாடுகளின் அமைப்பின் பொறுப்பின்கீழ் பொதுவான நிதியத்தை ஏற்படுத்துவதற்கான உடன்படிக்கைக்கு இணங்குவதற்கும் தேவையான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. இலங்கை சீன வர்த்தகக் கொடுப்பனவுகள் உடன்படிக்கை 1980 ஆம் ஆண்டில் நீடிக்கப்பட்டது. இவ்வுடன்படிக்கையின் நியதிகளின்படி இலங்கையிடமிருந்து 20,000 தொன் இறப்பரை சீன வாங்க இணங்கியவேளையில் இலங்கை 1981 ஆம் ஆண்டில் சீனவிடமிருந்து 80,000 தொன் அரிசியைக் கொள்வனவு செய்ய இணங்கியது. பொதுவான வர்த்தக உடன்பாடுகள் பிலிப்பைன்சுடனும், மாலைத்தீவுடனும் கைச்சாத்திடப்பட்டன. புடவைகள் ஆடைகளின் ஏற்றுமதிகளைப் பொறுத்தவரையில் 1980 ஆம் ஆண்டில் ஐ. அமெரிக்காவுடனும், சுவீடனுடனும் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டன. வர்த்தக முதலீட்டு நிலையங்கள் தென்மார்க்கிலும், சேர்மன் இணைப்பாட்சிக் குடியரசிலும் ஏற்படுத்தப்பட்டன. பன்னுட்டு வர்த்தக சந்தைகள் பலவற்றில் இலங்கையும் பங்கேற்றுக் கொண்டது.

**உள்நாட்டு வர்த்தகம்**

வெளிநாட்டு வர்த்தகத்தினைப்போன்றே உள்நாட்டு வர்த்தகக் கொள்கையின் நோக்கமும் ஒரு கட்டற்ற சந்தை அமைப்பைப் படிப்படியாக அடைவதாக இருந்தது. இங்கு விலைப்பொறி முறையானது போட்டியின் வாயிலாக உற்பத்தித் துறைகளை நெறிப்படுத்தவும், நுகர்வோர் நன்மைகளைப் பாதுகாக்கவும் செய்கிறது. கட்டற்ற வர்த்தகக் கொள்கையாக இது இருந்தபோதும் நுகர்வோரினதும் அதே போன்று உற்பத்தியாளர்களினதும் நன்மைகளைப் பாதுகாப்பதற்குச் சிலவேளைகளில் சந்தையில் தலையிடுவதும் வேண்டியதொன்ருக உள்ளது. அரசதுறை அமைப்புக் களுக்கும் தனியார்துறைக்குமிடையில் போட்டியை ஊக்குவிக்கும் பொருட்டு பல அரசதுறைஅமைப்புக்கள் அடைந்து வந்த தனியுரிமைகள் மீளப்பெறப்பட்டதுடன், வர்த்தகத்தின் புதிய முறைகளை ஆக்கம் தரத்தக்க அணுகுமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. எனினும் சில இன்றியமையாத நுகர்வுப் பொருட்களான கருவாடு, வெங்காயம், மிளகாய், தீப்பெட்டி, மண்வெட்டிகள் போன்றன நுகர்வோரின் நன்மைகளைப் பாதுகாப்பதன் பொருட்டு முழுமையாக அரசதுறையினுல் இறக்குமதி செய்யப்பட்டன. உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியை ஈடுசெய்யும் பொருட்டே இப்பொருட்களின் இறக்குமதி முழுவதும் மேற்கொள்ளப்பட்டது. இவ்வின்றியமையாத பண்டங்கள் கட்டுப்பாடற்ற முறை யில் கிடைப்பதை உறுதிப்படுத்தும் வேளையில் உற்பத்தியாளரின் நன்மைகளைப் பாதுகாப்பதன் பொருட்டு, இப்பண்டங்களின் வழங்கலில் வீழ்ச்சி ஏற்படும் காலங் களிலேயே இப்பண்டங்களை இறக்குமதி செய்வதற்கு வர்த்தக அமைச்சு திட்ட மிட்டது. இன்றியமையாத நுகர்வுப் பொருட்களின் கிடைப்பனவை உறுதி செய்யும் பொருட்டு உள்நாட்டு வர்த்தகத்திணைக்களத்தினுலும், மத்தியவங்கி யினுலும் கிழமைதோறும் அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டு தட்டுப்பாடாகவுள்ள பண்டங்கள் குறித்து வர்த்தக அமைச்சிற்கு அறிவிக்கப்படுகின்றன. இன்றியமை யாத பொருட்களின் வழங்கலில் எழும் சிக்கல்கள் வர்த்தகம் தொடர்பான விலையிடல் என்பன நுகர்வோர் பாதுகாப்புக்குழுவின் ஒழுங்கான கூட்டங்களில் கலந்துரையாடப்பட்டன. இக்கூட்டங்களில் வர்த்தக அமைச்சு மத்தியவங்கி, முதன்மை வழங்கல், நுகர்வோர் அமைப்புக்கள் என்பன கலந்துகொண்டன.

இறுக்கமான வர்த்தகக்கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும் வேளையில் வர்த்தக நடவடிக்கைகள் ஒழுங்காக இயங்குவதற்கு ஒழுங்கான பொறிமுறை அமைப்புக் கள் சில கட்டாயமாகின்றன. உள்நாட்டு வர்த்தகத்திணைக்களம் தொடர்ந்தும் வர்த்தகச் சட்டத்தையும், உள்நாட்டு வர்த்தகத்தில் ஒழுங்கான வர்த்தக மரபு முறைகள் நிலவுவதன் பொருட்டு விலைகளின் கட்டுப்பாட்டுச்சட்டம் நிறுத்த லளவை, முகத்தலளவைச்சட்டம் என்பனவற்றை நிருவகித்தும் நடைமுறைப்படுத் தியும் வருகிறது.

சில்லறை விலை மட்டத்தில் பாதகமான விலைமாற்றங்களிலிருந்தும் நுகர் வோரைப்பாதுகாக்கும்பொருட்டு, நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ்வரும் ஏறத்தாழ 315 நுகர்வோர் பொருட்களை விற்பனை செய்யும் எல்லா வர்த்தகர் களும் அத்தகைய பொருட்களின் சில்லறை விற்பனைவிலைகளை காட்சிக்கு வைப்பது கட்டாயமாக இருந்தது. இச்சட்டத்தின்கீழ் அறிவுறுத்தல் தொடர்களும் வழங்கப் பட்டன.

நுகர்வோர் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு நிதியிடுவதற்கும், நுகர்வோர் அமைப்புக்களின் அபிவிருத்திக்கு உதவுவதன்பொருட்டு நுகர்வோர் பாதுகாப்பு நிதியம் ஒன்று நிறுவப்பட்டது. ஆண்டின் இறுதியில் நிதியத்திற்கான வரவின்

மொத்தத் தொகை ரூ. 115,000 ஆக விளங்கியது. கட்டற்ற நிறைபோட்டிச் சந்தைகளின் நன்மைபற்றிய நுகர்வோரின் அறிவை அதிகரிக்கும் நோக்குடன் உள்நாட்டு வர்த்தகத்திணைக்களம் 1980 ஆம் ஆண்டில் நடத்தப்பெற்ற ஒவ்வொரு மகாபொல வர்த்தக சந்தைகளிலும் பொருட்காட்சிகளிலும் கல்வி நிலையங்களை அமைத்துப்பேணியது. நுகர்வோர் சங்கங்களின் நிறுவனம் பொறுப்பேற்கப்பட்ட துடன் அத்தகைய 905 சங்கங்கள் இவ்வாண்டின் இறுதியில் நிறுவவும்பட்டன.

## சுற்றுலாத்துறை

கடந்த பத்தாண்டு காலப்பகுதியில் சுற்றுலாத்துறையானது வெளிநாட்டுச் செலாவணியைப் பெறுவதிலும் தொழில்வாய்ப்பினை உருவாக்குவதிலும், வருவாயை ஏற்படுத்துவதிலும் பிரதேச அபிவிருத்தியை ஏற்படுத்துவதிலும் முக்கியமானதொரு மூலமாக விளங்கிவருகின்றது.

1980 ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் சுற்றுலாப்பயணத்தர்களின் வருகை அதன் இலக்காகிய 298,000 த்தினை 8 சதவீதத்தால் விஞ்சி 1980 ஆம் ஆண்டில் நாட்டுக்கு வருகைதந்தோரின் மொத்தத்தொகை 321,780 ஆகக் காணப்பட்டது. இது முன்னைய ஆண்டின் எண்ணிக்கையைவிட 29 சதவீதம் கொண்ட அதிகரிப்பைக்கொண்டுள்ளது. இந்த ஆண்டில் அடையப்பட்ட வளர்ச்சி வீதம் கடந்த பத்தாண்டுகாலமாக பெறப்பட்டுவந்த 22.5 சதவீதங்கொண்ட ஆண்டுச் சராசரி வளர்ச்சி வீதத்தைவிட கூடியதாகும். எனினும், 1980 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட சுற்றுலாப் பயணத்தர்களின் போக்குவரத்து வளர்ச்சி வீதம் 1979 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்டதைவிடக் குறைவானதாகும் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதே வேளையில் 1980 ஆம் ஆண்டில் வருகைதந்த '' இன்பப்பயணிகள் '' (அதாவது நாட்டில் 24 மணித்தியாலங்கட்குக் குறைவாக தங்கும் தற்காலிக வருகையாளர்களையும் கடற் சுற்றுலாப்பயணிகளையும் உள்ளடக்கி) ஆனால் இடைப்போக்கிலுள்ள பயணத்தர்களையும் நீக்கி 8,636 ஆக விளங்கி வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கினை மாற்றியமைத்தது.

மொத்தச் சுற்றுலாப்பயணத்தர்களின் வருகையினை மட்டும் கொண்ட கணக்கெடுப்பு நாட்டில் சுற்றுலாப்பயணத்தர்கள் போக்குவரத்தின் உண்மை அளவினைக்காட்டும் முழுக் குறிக்காட்டியாக அமையாது. அளவினை அறிவதற்கான சிறந்த அளவுகோலாக தங்கும் இரவுகளின் எண்ணிக்கை பயன் படும். சுற்றுலாப்பயணத்தர்களால் 1980 ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட மொத்த இரவுகள் 35 இலட்சங்களாக விளங்கி 30 சதவீதம்கொண்ட ஆண்டு வளர்ச்சியை எடுத்துக்காட்டியது. சுற்றுலாப்பயணத்தர்களின் வருகையின் அதிகரிப்பைவிட குறைந்த வீதத்திலேயே சுற்றுலாப் பயணத்தர்களின் இரவுகள் அதிகரித்துள்ளமை புலப்படுகின்றது. சுற்றுலாப்பயணத்தர் இரவுகளின் வளர்ச்சி வீதம் 7.7 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தமையை 1979 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட தொடர்பான எண்தொகைகள் காட்டுகின்றன. ஒரு சுற்றுலாப்பயணியின் தங்கும் காலத்தின் சராசரி அளவு 1975 ஆம் ஆண்டில் 9. 8 இரவுகளிலிருந்து 1979 ஆம் ஆண்டில் 11.1 இரவுகளாகவும் 1980 இல் 11 இரவுகளாகவும் மிகச்சிறிதளவான வீழ்ச்சியினை அடைந்தது.